பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51831 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 10 (25—7—68) வியாழன் ★ வெளியூர்: ஆடி 11 (26—7—68) வெள்ளி [இதழ்: 35

இந்தியாவுக்குத் தாய்லாந்து அரிசி

மேலும் 40,000-டன் கிடைக்கும்

பாங்காக், ஜூலை 25—
தாய்லாந்துடன் இந்தியா, 40,000 டன் அரிசி இறக்குமதி செய்யும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கிறது. இதன் மதிப்பு, 70-இலட்சம் டாலர்களாகும்.

இந்த ஆண்டுக் கடைசியில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் இந்த 40,000-டன் அரிசியையும் சேர்த்தால், 1968-ம் ஆண்டில் தாய்லாந்திலிருந்து இந்தியா வாங்கிய அரிசியின் அளவு 1,20,000-டன்களாக இருக்கும்.

வட்டார ஏற்றத் தாழ்வு நீக்கப்படுமா?

அமைச்சுத் துறைகளின் யோசனை கேட்கப்படுகிறதாம்

புதுடில்லி, ஜூலை 25—
பொருளாதார வளர்ச்சியிலும், வேலை வாய்ப்புக்களிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய வட்டார ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவது சம்பந்தமாக உருப்படியான யோசனைகளைத் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சுத் துறைகளுக்குத் தலைமை அமைச்சர் கடிதமெழுதியுள்ளார்.

இந்த யோசனைகளை ஆகஸ்டு 15-ம் நாளுக்குள் தெரிவிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில், 'வட்டார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று கருத்தறிவிக்கப்பட்டிருந்ததையொட்டியே மேற்கண்டவாறு தலைமையமைச்சர் எழுதியுள்ளார்.

'சிவசேனை' வீழ்த்தப்பட்டது

சென்ற வாரம் நடைபெற்ற நாசிக்ரோட்— திலோய் நகராட்சித் தேர்தலில் போட்டியிட்ட சிவசேனை இயக்க வேட்பாளர் ஏழுபேரும் படுதோல்வியடைந்திருக்கின்றனர்.

அந்தப் பகுதியின் சிவசேனைத் தலைவரான அத்தார், நான்கே ஓட்டுக்களைப் பெற்று பொறுப்புத் தொகையை இழந்திருக்கிறார்.

திட்டத் தோல்விகளுக்கு முக்கியக் காரணங்கள்

நிலைமையறிந்து செயல்படத் தவறினர்

முன்யோசனையின்றித் திட்டங்களைத் தீட்டினர்

பருவநிலைக் கோளாறும் நிர்வாகச் சீர்கேடும் சேர்ந்துகொண்டன

முன்னாள் நிதியமைச்சர் தேஷ்முக் விளக்கம்

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றியடையாமற் போனதற்கு முக்கியக் காரணம், நிலைமைக்குத் தகுந்தவாறு நாம் செயல்படத் தவறியதே ஆகும்"

என்று, இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சரும் பொருளாதார நிபுணருமான சி. டி. தேஷ்முக் கருத்தறிவித்திருக்கிறார்.

கருத்தரங்கு ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறியளவான 5 அல்லது 6 சதவிகித வளர்ச்சி என்பது சாத்தியமானதாகும்.

திட்டம் வெற்றி பெறுவதற்கு முக்கியமான சில அடிப்படை உண்மைகள் உண்டு. அவைகளில், நாட்டின் அரசியல் அமைப்புச் சூழ்நிலை முக்கியமானதாகும்.

திட்டத்தைச் சீர்குலைக்கும் எந்த முயற்சிக்கும் இடமளிக்கக்கூடாது. தலைமையமைச்சரும், மாநில முதலமைச்சர்களும், திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முழுப் பொறுப்புக்களும் ஏற்கவேண்டும்.

இரண்டாவது திட்டத்தில், நாம் உடனடிப் பயன்தராத கனரகத் தொழில்களை அமைப்பதில் அதிகக் கவனம் செலுத்தினோம். சிறு தொழில்களும் கிராமத் தொழில்களும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் என்று நம்பி ஏமாந்தோம்; இரு ஆண்டுகள் பருவ நிலையும் தவறிவிட்டது. இத்துடன் நிர்வாகச் சீர்கேடும் சேர்ந்து கொண்டன. ஆக இரண்டாவது திட்டம் வெற்றி பெறவில்லை!

மூன்றாவது திட்டம் தோல்வியடைந்ததற்குக் காரணம், நமது திறமைக் குறைவல்ல என்பது எனது கருத்தாகும். நமது எல்லையில் அந்நியர் படையெடுத்தது ஒரு காரணமாகும்.

போருக்குப் பிறகு மூன்றாவது திட்டத்தைத் திருத்தியமைப்பதில் நாம் தவறிவிட்டதே மூன்றாவது திட்டத் தோல்விக்கு முக்கியக்காரணமாகும். பாதுகாப்புத் துறையிலும், திட்ட வளர்ச்சித் துறையிலும் நாம் ஒன்றாக ஈடுகொடுத்து முன்னேறலாம் என்று நம்பினோம்.

நான்காவது திட்டத்தைத் தள்ளிப்போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குக் காரணம், ரூபாய் மதிப்புக் குறைப்பு நடவடிக்கையேயாகும்."

பொறியரிடை வேலையின்மை— நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினர்கள் கவலை

புதுடில்லி, ஜூலை 24—
எஞ்சினியரிங் பட்டதாரிகளிடையே பெரும் அளவில் வேலையின்மை நிலவிவருவது பற்றி நாடாளுமன்ற மேலவையில், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கவலை தெரிவித்தனர்; 'இயன்ற வரையில் அவர்களை அரசுத் துறைகளிலாவது சேர்த்துக் கொள்ளத் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்' என அவர்கள் அரசினரை வற்புறுத்தினர்.

படை பலத்தை இரட்டிப்பாக்குகிறது பாகிஸ்தான்

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வெளியிடும் தகவல்

புதுடில்லி, ஜூலை 24—
"பாகிஸ்தான் இராணுவத்தில் தரைப் படை வீரர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியிருக்கிறது.

"போர் விமானங்களின் எண்ணிக்கையும் இருமடங்காகிவிட்டது.

"இப்போது, கப்பற் படைக்குப் பல நீர்மூழ்கிக் கப்பல்களைச் சேர்த்துக்கொண்டு வருகிறது"

என்ற மதிப்பீட்டை, பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங், மக்களவையில் வெளியிட்டார்.

"கண்காணிப்புப் படைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகின்றன" என்றும் அவர் தெரிவித்தார்.

"ஜீப்புகள், இராணுவ லாரிகள், ஹெலிகாப்டர் போன்றவையெல்லாம் இரஷ்யா பாகிஸ்தானுக்குத் தருகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு நிறுவனத்தில் நிர்வாக ஊழல்

இலட்சக்கணக்கில் பணம் பாழான வேதனை

புதுடில்லி, ஜூலை 23—
போபாலில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலையில் பல நிர்வாக ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சில ஆண்டுகளுக்குமுன் பாதாளத் தந்திக் கம்பிகள் வாங்கிய வகையில் ரூ. 1,08,000 வரை இழப்பு ஏற்பட்டது. இதுபற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

ரூ. 1,94,000 மதிப்புக்குப் பாதாளத் தந்திக் கம்பிகளுக்கான ஆர்டர் கொடுக்கப்பட்டது; அதில் ரூ. 35,000 மதிப்புள்ள கம்பிகள் வாங்கப்பட்டபின், அந்த ஆர்டர் ரத்து செய்யப்பட்டது.

பின்னர், அவசரத் தேவையை முன்னிட்டு மற்றொரு நிறுவனத்திடம் பாதாளத் தந்திக் கம்பிக்காக ரூ. 6,48,000 மதிப்புக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது.

மற்றொரு வகையில் பம்பாய்த் துறைமுகத்தில் இந்த நிறுவனத்துக்கான பொருள்கள் டெலிவரி எடுத்துக் கொள்ளப்பட்டது. தேங்கிக்கிடந்த காரணத்தால் ரூ. 94,000 அபராதம் (டேமரேஜ்) செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக இருப்பு உருக்குக் கட்டுப்பாட்டு அதிகாரி தமது அலுவலகத்திலிருந்து தேவையான சான்றுகளை அனுப்புவதற்குத் தாமதப்படுத்திவிட்டாராம். இந்தக் காரணத்தால் நேர்ந்த இழப்பு ரூ. 25,000 ஆகும். இதுவும் மேற்சொன்ன அபராதத் தொகையில் அடங்கியுள்ளது.

மற்றும் உள்ளூர் நிறுவனம் ஒன்றில வாங்கப்பட்ட 4,700 லிட்டர் அனல் இறுக்க வார்னிஷ், வந்து சேருவதில் ஏற்பட்ட தாமதத்தால் பாழ்பட்டுப்போய் இந்த நிறுவனத்துக்கு ரூ. 30,000 இழப்பு ஏற்பட்டது.

ஆளில்லாமலே இயங்கும் முதல் தொழிற்சாலை

புதுடில்லி, ஜூலை 25—
முழுவதுமே தானியங்கும் இயந்திரத்தால் அமையக்கூடிய உலகின் முதல் தொழிற்சாலை ஒன்று இங்கிலாந்தில் விரைவில் ஏற்படவிருக்கிறது. தனிப்பட்ட நிறுவனம் இதை அமைத்திருக்கிறது.

இத்தொழிற்சாலையில் சிகரெட் செய்வது—'பாக்கிங்' செய்வது—பதனப்படுத்துவது ஆகிய வேலைகள் நடைபெறும்.

இப்பொழுது ஆகக்கூடிய நேரத்தில் 20-ல் ஒரு பங்கு நேரம் இதற்குச் செலவிட்டால் போதுமாம்.

செலவுத் தொகையில் 10-ல் ஒரு பங்குதான் ஆகும் என்றும் கூறப்படுகிறது.

நெருக்கடிமிக்க நாகாலாந்து நிலைமை

சமாளிக்கக் கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி யோசனை

ஏற்கத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி மறுப்பு

புதுடில்லி, ஜூலை 24—
"இந்திய அரசுடன் கலக நாகர்கள் ஏற்படுத்திக்கொண்ட சமாதான ஒப்பந்தத்தை மீறிச் செயல்பட்டுவரும் தற்பொழுதைய சூழ்நிலையில், அவர்களுடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற எண்ணம் இந்திய அரசுக்கு இல்லை" என்று நாடாளுமன்ற மக்களவையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

"நாகாலாந்தின் நிலைமை நெருக்கடியானது என்பது உண்மைதான்; ஆயினும், அரசு, பிரச்சினையை உறுதியுடன் அணுகவில்லை என்று கூறுவது சரியல்ல"

என்றும் அவர் தெரிவித்தார்.

"நாகர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட சமாதான ஒப்பந்தத்தைச் சிறுகச் சிறுக நீடித்துக் கொண்டு போவதற்குப் பதில், சில ஆண்டுகளுக்கு மொத்தமாக அவர்கள்மீது எடுக்கப்படும் நடவடிக்கையை ரத்து செய்யலாம்"

என்று கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்த யோசனையைத் தலைமையமைச்சர் ஏற்கவில்லை.

"மாறிவரும் அங்குள்ள நிலைமைக்கேற்ப, ஒப்பந்தம் நீடிப்பது சம்பந்தமாக நாம் முடிவெடுத்துக்கொண்டு வருகிறோம்; தற்போதைய சூழ்நிலையில் சமாதான ஒப்பந்தத்தை மேலும் நீடிப்பது சரியல்ல என்றே நான் கருதுகிறேன்"

என்று தலைமையமைச்சர், கிருஷ்ணமூர்த்தியின் யோசனைக்குப் பதிலளித்திருக்கிறார்.

போர் நிறுத்தக் காலத்தை நீடிக்கக் கோரிக்கை

கலக நாகர் நம்பிக்கை

நாகாலாந்து போர் நிறுத்த காலம் இத்திங்கள் இறுதியுடன் முடிவடைகிறது; இதனை இவ்வாண்டு இறுதி வரையில் நீடிப்பதென்று நாகா கலகக்காரர்கள் தாங்களாகவே முடிவு செய்துள்ளனர்.

"போர் நிறுத்தக் காலத்தை நீடிக்க மத்திய அரசு ஒப்புக்கொள்ளுமென நம்புகிறோம்" என்று 'கலக அரசின் அதிபர்' எனக் கூறிக்கொள்ளும், மாயாசியு என்பவர், தலைமையமைச்சருக்கு அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மத்திய அரசுத் தொழிற்சாலை நிர்வாகிகளின் மாநில வெறி!

உயர்தர பதவிகட்கு ஒரு மாநிலத்துக்கே சலுகை

புதுடில்லி, சூலை 25—

மத்தியப் பிரதேசத்தில் உள்ள போப்பால கனரக மின்சாரத் தொழிற்சாலையின் நிர்வாகிகள், தொழிற்சாலைக்கான பொறியர்களை (எஞ்சினீயரிங்) தேர்ந்தெடுப்பதில் தங்களுக்குள்ள மாநில வெறியை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான இந்தத் தொழிற்சாலையில், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் ; மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன.

போப்பால் கன மின்சாரத் தொழிற்சாலைக்கு அண்மையில் 31 பொறியியல் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் ; இந்தப் பொறியர்கள் அனைவரும் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஏராளமான விண்ணப்பங்கள் இவ்வேலைக்கு வந்திருந்தும், தொழிற்சாலை நிர்வாகிகள், ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வாய்ப்பளித்துள்ளது பற்றி மத்திய அரசு தனது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறதாம்.

வேலைக்குவிண்ணப்பங்கள் நூற்றுக்கணக்கில் வந்திருந்ததாகவும், அதிலிருந்து தேவையானவர்களைத் தேர்ந்தெடுக்கும் சிரமமான வேலையை எளிதாக்குவதற்கே மேற்கண்ட முறையைக் கடைபிடித்ததாகவும் நிர்வாகிகள் சமாதானம் கூறியிருக்கின்றனராம். இனிமேல் இப்படி நடைபெருமல் இருக்க முயலுவதாகவும் அவர்கள் உறுதி கூறியிருக்கின்றனராம்.

இம்மாதிரி குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டுமே உயர்தர வேலைக்கு ஆட்களை எடுப்பது இதுவே முதன்முறையாம்.

கடந்த 10 ஆண்டுகளாக ஏறக்குறைய 500-க்கு மேற்பட்ட பொறியர்கள் இந்நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் அனைத்திந்திய அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பத்தாயிரம் பேருக்கு ஒரு மருத்துவ மனை !

தமிழக அரசின் திட்டம்-- அமைச்சர் தகவல்

கிருஷ்ணகிரி சூலை 23

"மக்கள் நலனைப் பேணிக் காக்கவே தி.மு.க. அரசு விரும்புகிறது. சுகாதார அமைச்சராக நான் பொறுப்பேற்ற பிறகு இதுவரை 41 மருத்துவமனைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. இன்னும் இருபது இடங்களில் விரைவில் புதிய மருத்துவமனைகள் திறக்கப் படவிருக்கின்றன"

என்று, சுகாதார அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் சாமல்பட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனையைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

"தமிழகத்தில் பத்தாயிரம் பேர் உள்ள ஒவ்வொரு ஊருக்கு ஒரு மருத்துவமனை வீதம் ஏற்படுத்தப்படும்"

என்று மேலும் அமைச்சர் தெரிவித்தார்.

டெல்லியின் யோசனையைப் புறக்கணித்தது காஷ்மீர்

தனிக் கொடி --- தனி அந்தஸ்தைக் கைவிட மறுப்பு

"காஷ்மீரின் தனிக்கொடியை அகற்றி இந்தியத் தேசியக் கொடியை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் வகையில் காஷ்மீர் மாநிலச் சட்டத்தை திருத்தவேண்டும்" என்று டெல்லி அரசால் தெரிவிக்கப்பட்ட கருத்தை மாநில அரசு பரிசீலனை செய்தது ; பரிசீலனைக்குப்பின், தனிக் கொடியைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது என்று காஷ்மீர் மாநில அரசு முடிவு செய்துள்ளது.

'காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி. இந்திய மண்ணுடன் இரண்டறக் கலந்துவிட்ட அந்தப் பிரதேசத்தைப் பற்றிப் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை"

என்றெல்லாம் விண்ணதிரப் பேசினாலும், காஷ்மீருக்கென்று சில தனித் தன்மைகள் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

அண்மைக்காலம் வரையில், காஷ்மீரின் முதல்வர், 'முதலமைச்சர்' என்று அல்லாமல், 'பிரதம மந்திரி' என்றே அழைக்கப்பட்டு வந்தது நினைவிருக்கலாம்.

பிறகு காஷ்மீரை இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றாக்கி, அதன் 'பிரதமரை' முதலமைச்சராக ஆக்கினர் !

அப்படியும் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு இல்லாத ஒரு தனித் தகுதியை காஷ்மீர் இன்னமும் இழக்காமலேதான் இருந்துவருகிறது !

வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லாத உரிமையாகக் காஷ்மீர் மாநிலம், தனக்கென்று ஒரு தனித் தேசியக் கொடியைப் பெற்றுள்ளது.

காஷ்மீர் முன்பு தனி சமஸ்தானமாக இருந்த நாளில் அது பெற்றிருந்த கொடி இன்னமும் அங்கு பட்டொளி வீசிப் பறந்துகொண்டுதான் இருக்கிறது.

காஷ்மீர் மாநில அரசின் தலைமைச் செயலகத்திலும், மற்ற அரசாங்க அலுவலகங்களிலும் காஷ்மீரின் கொடியும்—இந்தியாவின் தேசியக் கொடியும் இணையாகப் பறக்கவிடப்படுகின்றன !

இந்தியத் தலைநகரில் சட்டம்-அமைதி காக்கப்படும் இலட்சணம்

காவல் துறையினரின் கடமையுணர்வற்ற போக்கு

மாஜிஸ்திரேட்டே நற்சான்று வழங்குகிறார்

இந்த ஆண்டுத் துவக்க நாளன்று இந்தியத் தலைநகரான டெல்லி மாநகரில், நாகரிக சமூகம் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு நடைபெற்ற குறும்புத்தனங்களும், வன்முறைகளும் குறித்து விசாரணை செய்த மாஜிஸ்திரேட்டின் அறிக்கை இப்பொழுது வெளியாகியிருக்கிறது.

டெல்லியின் கன்னுட் பகுதியில் புத்தாண்டுவிழாவைக் கொண்டாடும் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது ; அவர்களில் சிலர், 'யாரும் யாரையும் எதையும் செய்யலாம்' என்ற நினைப்பில் செயல்பட்டனர். சாலையில் சென்றுகொண்டிருந்த கார்கள் கல்லெறிக்கு உட்பட்டன; பெண்கள் அவமதிக்கப்பட்டனர்.

இத்தனைக்கும் ஏராளமான போலீசார் அங்கு காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். இந்த வன்முறைகளையெல்லாம் டெல்லியின் சட்டம்—அமைதிப் பாதுகாவலர்களான காவல்துறையினர் காணவோ, அதுபற்றி அறிந்துகொள்ளவோ விரும்பவில்லை.

விசாரணை செய்த மாஜிஸ்திரேட், போலீசாரின் கடமையுணர்வற்ற இப்போக்கை கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

அவமானத்துக்குள்ளான ஒரு பெண்மணியின் பெயர் அல்புகார்க் என்பதாகும் ; இவர், முன்னாள் உயர்தர அதிகாரி ஒருவரின் மனைவியாவார். தனக்கு ஏற்பட்ட அவமானம் பற்றி ஒரு புகார் தாக்கல் செய்ய அவர் போலீசு நிலையம் சென்றிருந்தபோது, ஒரு பெண்மணிக்குக் காட்டவேண்டிய சாதாரண மரியாதையின்படி, நாற்காலியில் அமரும்படி போலீசு நிலைய அதிகாரி சொல்லவில்லை என்பதால் மாஜிஸ்திரேட் வியப்புத் தெரிவித்துள்ளார்.

அப்பெண்மணி மறுநாள், தலைமையமைச்சரிடமே சென்று முறையிட்டிருக்கிறார். அன்று மாலையில், போலீசாரின் போக்கைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டிருக்கிறது.

கிடைக்கப் பெற்ற எல்லா சாட்சியங்களும் போலீசாரின் பொறுப்பற்ற தன்மையைத் தெளிவாகக் காட்டுவதாக அமைந்துள்ளன.

புத்தாண்டு விழாவைக் கொண்டாடும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து வெறித்தனத்தில் ஈடுபட்ட இவர்களில் பெரும்பாலோர் படித்தவர்கள் ; 20-க்கும் 35-க்கும் இடையே உள்ள வயதினர் ; நன்ருக உடை உடுத்தியவர்கள் ; மது அருந்தியவர்களாகவோ, அல்லது ஏதோ ஒரு வகையில் போதைப் பொருட்களை உண்டவர்களாகவோ இருந்தனர்.

தங்கள் எதிரிலேயே இவர்கள் சட்டவிரோதச் செயலில் ஈடுபடுகையில், அதைத் தடுக்க வேண்டுமென்ற கடமை உணர்ச்சி ஏன் போலீசாருக்கு ஏற்படவில்லை என்பதில் மாஜிஸ்திரேட் ஆச்சரியப்பட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட வன்முறையினர் ஒன்று சேராமல் தடுக்கப்பட்டிருப்பார்களேயானால், நிச்சயமாக, நடைபெற்ற -- விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம என்பது மாஜிஸ்திரேட்டின் கருத்தாகும்.

'அன்றையத்தினம் அந்த இடத்தில் இருந்த போலீசுப் படை, நிலைமையைக் கட்டுப்படுத்தப் போதுமானதாயில்லை' என்ற வாதத்தையும் மாஜிஸ்திரேட் ஏற்கவில்லை.

"பல இடங்களிலும் போலீசுப் படையினர் போதுமான அளவிலேயே இருந்திருக்கின்றனர். இருந்தும், பகிரங்கமாக நடத்தப்படும் சட்ட விரோதச் செயல்களைத் தடுக்கத் தவறிவிட்டிருக்கின்றனர் என்ருல், போலீசாரின் உணர்ச்சியற்ற தன்மையைத் தான் அது வெளிப்படுத்துவதாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தனது அறிக்கையின் முடிவில் மாஜிஸ்திரேட், 'போலீசார் தமது கடமையை உணர்ந்து, குண்டர்களை கைது செய்தோ அவர்களை அவ்விடத்தை விட்டுத் துரத்தியோ செயல்பட்டிருப்பார்களானல், நடைபெற்ற வன்முறைகளும், பெண்கள் அவமானப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளும் ஏற்படாமல் இருந்திருக்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இங்கிலையில், கருநாடகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே குண்டர்களின் தாக்குதலுக்குள்ளானது, இந்தியாவின இதயமான டெல்லியில் சட்டம்---அமைதி எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்தக் கதி என்ருல் சாதாரணமான குடிமகனின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ ?

இதில் இன்னும் வியப்புக்குரியது என்னவென்ருல், தாக்குதலுக்குள்ளான இராம ரெட்டி என்னும் மேற்படி உறுப்பினரிடம், உள்துறை அமைச்சர் சவானே, வேறு எந்த உயர்தர அதிகாரியோ நடந்த நிகழ்ச்சி பற்றி அறிந்துகொள்வதற்குக்கூட முயற்சி செய்யவில்லை என்பதாகும.

நிகழ்ச்சி தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகப் போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

திட்டத்துக்கு அந்நிய உதவி கிடைப்பதில் சுணக்கம்

எதிர்பார்த்தது ரூ. 700 கோடி-- இதுவரையில் கிடைத்தது ரூ. 81 கோடிதான்

புதுடில்லி, சூலை 25—

இந்தியா நிதி உதவி நாடுகள் குழுவின் இலக்கான 100 கோடி டாலரில் (ரூ. 750 கோடி) இந்தியாவுக்கு இதுவரையில் திட்டப் பிணைப்பில்லா உதவி மொத்தம் ரூ. 81 கோடிதான் கிடைத்துள்ளது ; இதில் கடன் அடைப்பதற்கான உதவிக்காக 10 கோடி டாலர் (ரூ. 75 கோடி) சேர்ந்ததே.

திட்டப் பிணையில்லாத உதவிக்குப் பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன.

அமெரிக்கா நீங்கலாக மற்ற குழு நாடுகள் மொத்தம் ரூ 225 கோடிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றன. இதில், கடன் அடைப்பதற்கான உதவியும் சேர்ந்துள்ளது.

1966–67-ல் மொத்தம் 90 கோடி டாலர் உதவியில் மூன்றில் இரு பங்கை அனைத்து நாட்டு வளர்ச்சி சங்கமும், அமெரிக்காவும் சரிக்கட்டி உள்ளன.

நடப்பு ஆண்டில் மொத்தம் அந்நிய நிதி உதவியின் அளவு இன்னும் மதிப்பிடப்படவில்லை ; பல நிதி உதவி நாடுகளுடனும் நிதி உதவி நிறுவனங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது.

அமெரிக்க அயல்நாட்டு நிதி உதவியில் குறைப்பும், அனைத்து நாட்டு வளர்ச்சி சங்கத்தின் உதவி மெதுவாக வருவதாக இருப்பதும், உதவி வாய்ப்புக்களை மங்கலாக்கி விட்டது.

(5-ம் பத்தி பார்க்க)

ஹேமவதி அணை பற்றி மைசூர் முதல்வர்

தமிழகத்தின் அச்சத்தை தவிர்க்கலாம்-என்கிருர்

பெங்களூர், சூலை 24—

"'தமிழகம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது' என்பதாக மத்திய அரசு, ஹேமவதி அணைக்கு அனுமதி வழங்குவதைத் தாமதப்படுத்த வேண்டியதில்லை.

'தமிழகம்கூட, அணை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை ; இந்த அணையைக் கட்டினல், கிருஷ்ணராஜசாகருக்கு நீர் வரத்து குறைநது, அதிலிருந்து தமிழகத்துககு வரும் நீர் குறைந்துவிடுமோ என்றுதான் தமிழகம் அஞ்சுகிறது.

"இந்த அச்சத்தைத் தவிர்ப்பதற்காக இரு மாநில எஞ்சினீயர்களும் கூடிப் பேசி, இருதரப்பினரும் ஏற்கக்கூடியதோர் ஏற்பாட்டுக்கு வரலாம்"

என்று, மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல், செய்தியாளர்களிடம் கூறியிருக்கிருர்.

(1-ம் பத்தி தொடர்ச்சி)

வெளிநாட்டு உதவி குறித்து வரவு செலவு - செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கும்—கிடைக்கக்கூடியதற்கும் இடையில் துண்டு விழுவதன் அளவை இப்போது கணக்கிட முடியாது ; ஆயினும், 1968—69-ம் ஆண்டு திட்டததின் நிறைவேற்றம், கைவசம் கிடைத்துள்ள நிதி உதவியைப் பயன்படுத்து வதையே பொறுத்திருக்கிறதென்று அதிகாரபூர்வமான வட்டாரங்கள கருதுகின்றன.

1969-ம் ஆண்டுக்கான அயல்நாட்டு நிதி ஒதுக்கீடு மசோதாவை அமெரிக்கக காங்கிரசு முடிவாக நிறைவேற்றிய பிறகுதான், 1968—69-ல் அமெரிக்காவின் உதவியைப் பற்றித தெரிந்துகொள்ள இயலும்.

101 பேருக்குப் பட்டா--- 19 விவசாயிகட்குக்கடன்

ஊத்தங்கரையில் அமைச்சர் சாதிக் பாட்சா வழங்கினர்

தருமபுரி, ஜூலை 24—
ஊத்தங்கரையில் ஒரே இடத்தில் மூன்று விழாக்கள் கோலாகலமாக நடந்தன.

மாவட்ட ஆட்சித் தலைவர் கலைமான் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் சுகாதார அமைச்சர் சாதிக்பாட்சா கலந்துகொண்டு ரூ 28,000 மதிப்பில் கட்டப்பட்ட வேளாண்மைக் கிடங்கைத் திறந்துவைத்தார்.

101 ஏழைகளுக்கு 229 ஏக்கர் நிலத்திற்கான 'பட்டா'க்களை வழங்கினர்.

19 பேருக்கு ரூ. 31 500 காசோலை (செக்) மூலம் கடன் வழங்கி நில அடமான பாங்கிமூலம் விவசாயிகளுக்குப் புதிய கிணறுகள் வெட்டவும், பம்பு செட்டுகள் அமைக்கவும் கடன் வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைத்தார்.

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் எம். ஆறுமுகம்—ஊராட்சி மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் சுப்பிரமணியம் — வேங்கடத்தாம்பட்டி கிராம ஊராட்சியின் சார்பில் அதன் தலைவர் கோவிந்தன் ஆகியோர் அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தனர்

சட்டமன்ற உறுப்பினர் டி. என். தீர்த்தகிரி காந்தியார் படத்தையும்; நாடாளுமன்ற உறுப்பினர் ம. கமலநாதன் வள்ளுவர் படத்தையும்; மாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் எம் எஸ். கோவிந்தராசன் முதலமைச்சர் அண்ணு படத்தையும் திறந்துவைத்துப் பேசினர்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாவட்ட ஆட்சித் தலைவர் கலைமான் பேசுகையில், 'ஊத்தங்கரை வட்டத்தில் செப்டம்பர் திங்களில் நிலக்கடலைப் பயிர்களுக்கு விமானம்மூலம் பூச்சி மருந்து, தெளிக்கப்படவிருக்கிறது' என்ற தகவலை வெளியிட்டார்.

அமைச்சர் சாதிக்பாட்சா பேசுகையில், 'ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இருந்துவரும் 38 மருத்துவமனைகளைத் தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கிறது; அதன் முதற் கட்டமாக 10 மருத்துவமனைகளை முதலில் அரசு மேற்கொள்ளவிருக்கிறது; அவற்றில் ஊத்தங்கரை மருத்துவமனையும் ஒன்ருகும்' எனக் குறிப்பிட்டார்.

ஓட்டல் தொழிலுக்கு நிதியுதவி

மத்திய அரசின் திட்டம்

சென்னை, ஜூலை 24—
நாட்டில் சுற்றுப்பயண முக்கியத்துவம் உள்ள—தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஓட்டல் தொழில் வளர்ச்சிக்கு நிதியுதவி அளிக்க மத்திய அரசு அண்மையில் திட்டமொன்றை வகுத்துள்ளது; இதன்படி, மத்திய அரசு சுற்றுப்பயணத் துறையின் வளர்ச்சிக் கடன் திட்டத்திலிருந்து பணம் கிடைக்கும்.

தமிழகத்தில் இந்த நிதியுதவிக்கு சுற்றுப்பயண முக்கியத்துவம் உள்ள இடங்களாகச் சென்னை, மாமல்லபுரம், மதுரை, தஞ்சாவூர் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு சுற்றுப்பயணத் துறையின் முன்னனுமதி பெற்ற ஓட்டல் திட்டங்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கடன் வசதி கிடைக்கும்.

வெளிநாட்டுப் பயணிகளுக்கு வசதியானவையாகவும் ஏற்றவையாகவும் இருக்குமா என்பதைக் கவனத்தில்கொண்டு, ஓட்டல் திட்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதியுதவி பெற விரும்புகிறவர்கள் ஓட்டலுக்கான வரைபடங்களையும், ஓட்டலில் செய்து தரப் போகும் வசதிகள்—நிதி அம்சங்கள் போன்ற விவரங்களையும், ஓட்டல் கட்டப்போகும் இடம் தகுதியானது என்பதற்கான சான்றுகளையும் அனுப்பவேண்டும். சுற்றுப்பயணத்துறையின் ஒழுங்குமுறை நிபந்தனைகளுக்கும் அவர்கள் இணக்கம் தெரிவிக்கவேண்டும்.

இத்தகைய 'அங்கீகரிக்கப்பட்ட ஓட்டல்கள்' சில, வரி—நிதிச் சலுகைகளையும், கடன் போன்ற நிதி உதவியையும் பெறத் தகுதியுடையவையாகும்.

கடன் உதவிக்கான விண்ணப்ப நமூனக்கள் -- விவரங்கள் ஆகியவற்றை, 'ஓட்டல்கள் இயக்குநர், சுற்றுப்பயண இயக்குநர்—ஜெனரல் அலுவலகம், சுற்றுப்பயணம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், போக்குவரத்து பவன், 1, பார்லிமெண்டு தெரு, புதுடில்லி'—'மத்திய அரசு சுற்றுப்பயண அலுவலகம், மவுண்ட் ரோடு, சென்னை'—செய்தி விளம்பரத் துறை இயக்குநர், தமிழக அரசு, சென்னை-9' ஆகிய முகவரிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாநகராட்சித் தேர்தல் அதிகாரி

சென்னை, ஜூலை 24—
தர்மபுரியில் வருவாய்த் துறை வட்டார அதிகாரியாக இருந்து தற்போது விடுமுறையிலுள்ள முகமது அபுதாகிர், மாநகராட்சித் தேர்தலுக்கான தனி துணைக் கலெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

பொருள் யாருடையது?

சென்னை, ஜூலை 24—
சென்னை போலீசுக் கமிஷனர் அலுவலகத்தில் மே 31-ந் தேதி வரை பொதுமக்களால் உரிமை கோரப்படாமல் இருக்கும் பொருள்கள், ஆகஸ்டு 10-ந் தேதிக்குப் பிறகு விற்பனை செய்யப்பட்டுவிடும்.

இந்தப் பொருள்களை உரிமை கொண்டாடக்கூடிய யாரும் இந்தத் தேதிக்கு முன்னதாக கமிஷனரிடம் சென்று தங்கள் உரிமையை எழுத்து மூலம் தெரிவித்துக்கொள்ளலாம்.

சென்னை 15-வது வட்ட வாக்காளர் பட்டியல்

சென்னை 15-வது வட்டத்துக்கான மாநகராட்சி வாக்காளர் பட்டியல், மண்ணடி ஜில்ஸ் தெரு, 24-எண்ணுள்ள இல்லத்தில் உள்ளது; கழகத் தோழர்கள் பார்வையிட்டு, புதிய வாக்காளர்களைச் சேர்க்கவோ, திருத்தங்கள் செய்யவோ மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் ந. முருகேசன் அறிவிக்கிருர்.

இந்தியாவிலேயே பெரியதாக சென்னைத் துறைமுகம் அமையும்

மேலும் பல கப்பல் துறைகள் ஏற்படும்

சென்னை, ஜூலை 24—
சென்னைத் துறைமுகத்துக்கான இரண்டாவது மண்வாரிக் கப்பலை துறைமுக நிறுவனத் தலைவர் திரு. கார்த்திகேயன் துவக்கிவைத்தார்.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பாலையின் தேவைகளைச் சமாளிப்பதற்காக ஒரு ரேவு துறையும், இரும்புக் கனிகளை ஏற்றி அனுப்புவதற்காகக் கூடுதலாக மற்றொரு ரேவு துறையும் நிறுவ இந்த மண்வாரிக் கப்பல் உதவும்.

சென்னைத் துறைமுகம் விரிவுபடுத்தப்பட்டு வருவதும், இதற்காகக் கடலை ஆழப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருவதும் தெரிந்த ஒன்ருகும்.

இப்போதுள்ள சென்னைத் துறைமுகத்தை அடுத்து அமைக்கப்படும் வெளித் துறைமுகத்தில் கப்பல் தளங்கள் அமைக்க டச்சு நாட்டிலிருந்து வந்துள்ள 'தீஸ்பே' என்ற மண்வாரிக் கப்பல், கடந்த ஏப்ரல் திங்களிலிருந்து மண் தோண்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த மண்வாரிக் கப்பல், துறைமுகத்திற்குள் கப்பல்கள் நுழையும் கால்வாய்ப் பகுதியை ஆழப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருககிறது.

சென்னையை அடுத்துள்ள மணலியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படுவதால், அந்த ஆலைக்குத் தேவையான சுத்தம் செய்யப்படாத எண்ணெயுடன் ('குரூட் ஆயில்') பல கப்பல்கள் சென்னைத் துறைமுகத்துக்குவரும். இந்த ஆலையில் சுத்தம் செய்யப்பட்ட பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு பல கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்படும்; எனவே, சென்னைத் துறைமுகத்தில் எண்ணெய்க் கப்பல்கள் தங்குவதற்குக் கப்பல் தளம் ஒன்று கட்டப்படுகிறது.

இந்தக் கப்பல் தளம் அமைக்கக் கடலை ஆழப்படுத்துவதற்கு டச்சு நாட்டிலிருந்து மற்றொரு மண்வாரி கப்பலான 'பெங்கால் பே' என்ற கப்பல் வந்துள்ளது, நடைபெற்ற விழாவில் மண் தோண்டும் வேலையைத் தொடங்கியது.

சென்னைத் துறைமுகம் அதிக ஆழம் இல்லாததால், பெரிய எண்ணெய்க் கப்பல்கள் வரமுடியவில்லை. கடல் ஆழம் 34½ அடி மட்டுமே இருப்பதால், சுமார் 22,000 டன் எடையுள்ள எண்ணெயை ஏற்றிக்கொண்டு வரும் சிறு கப்பல்கள் மட்டுமே துறைமுகத்தில் நுழையமுடிகிறது.

எண்ணெய்க் கப்பல்கள் தங்கும் தளம் அமைக்கப்பட்டதும், கடலின் ஆழம் 42 அடியாகவும், 77,000 டன் எடையுள்ள எண்ணெயை ஏற்றிக்கொண்டு பெரிய கப்பல்கள் வரவும்—போகவும் வசதியாக இருக்கும்.

சென்னைக் கடலில் மண் தோண்டி ஆழப்படுத்த டச்சு நிறுவனத்துக்கு ரூ. 2 கோடியே 82 இலட்சத்துக்குக் காண்டிராக்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மண் தோண்டும் வேலை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டமிட்டுள்ளபடி சென்னை வெளித் துறைமுகம் அமைக்கப்பட்டுவிட்டால், இன்னும் பல கப்பல் தளங்கள் ஏற்படும் என்றும், அப்போது சென்னைத் துறைமுகம் இந்தியாவிலேயே பெரிய துறைமுகமாகத் திகழும் என்றும் சென்னைத் துறைமுக போர்டு தலைவர் கார்த்திகேயன் நிருபர்களிடம் கூறினர்.

"கடந்த ஜூன் மாதத்திலிருந்து கப்பலில் அனுப்பப்படும் சரக்குக் கட்டண விகிதத்தில் மாற்றம் செய்தால் ரூ.72 இலட்சம் சென்னை துறைமுகத்துக்கு அதிக வருமானம் கிடைக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

எண்ணெய்த் துறைக்கு ரூ. 8 கோடியும், இரும்புக் கனித் துறைக்கு ரூ 10 கோடியும் செலவாகும்.

சென்னைத் துறைமுகத்துக்காக நான்காவது திட்ட காலத்தில் மேற்கொள்ளவேண்டிய புதுத் திட்டங்களைத் துறைமுக நிறுவனம் தயாரித்துள்ளது; இவற்றிற்கு ரூ. 32 கோடி செலவாகும்.

நசுவணியாற்றில் அணை

பட்டுக்கோட்டை--முத்துப்பேட்டை சாலையில் அமையும்

பட்டுக்கோட்டை, ஜூலை 24—
பட்டுக்கோட்டை தாலுகா வழியாகச் செல்லும் நசுவணியாற்றில் (காட்டாறு) காவிரி--மேட்டூர் வாய்க்காலில் தண்ணீர்விட ஆரம்பித்தவுடனேயே ஊரில் தண்ணீர் ஓட ஆரம்பித்துவிடுகிறது; எனவே, இந்தத் தண்ணீரை வீணுக்காமல், மடைமடைப் பகுதிகளாகிய நரசிங்கபுரம், படிஞ்சூர், அதிராம்பட்டினம், மஞ்சவயல் முதலிய கிராமங்களுக்கு இந்தத் தண்ணீரை அணையின் மூலம் தேக்கி சுமார் 30,000 ஏகருக்குப் பாசன வசதி கொடுப்பதற்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

இந்த அணை, அதிராம்பட்டினம் —மதுக்கூர் சாலையில் நசுவணியாற்றின் ரோடு பாலத்திற்கு மேல் மழவேனிற்காடு கிராமத்தில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டது.

ஆனல், பின்பு அத்திட்டத்தில் அதிக சாகுபடிக்குத் திட்டமிட்ட நிலங்கள் வனத் துறையைச் சேர்ந்ததாகவும், உப்புவர் பூமியாக இருந்ததனுலும், 'அத்திட்டம் பயனில்லை' என்று மறுபரிசீலனை செய்யப்பட்டு, அந்த அணையை மாற்றி பட்டுக்கோட்டை—முத்துப்பேட்டை சாலையில், மேற்படி ஆற்றுப் பாலத்திற்குமேல் ஒரு அணை கட்டினுல் நல்ல பலன் ஏற்படும் என்று சில விவசாயிகள்—சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமும், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டம் நல்ல பயன் அளிக்கக்கூடியது.

வடகாடு பிரிவு வாய்க்கால், நரசிங்கபுரம் பிரிவு வாய்க்கால் போன்ற மேட்டூர் வாய்க்கால்களுக்கும் இதன்மூலம் தண்ணீர் வழங்க முடியும். இதனுல் கடைமடைப் பகுதிகளுக்குள்ள தண்ணீர் பிரச்சினையும் ஓரளவுக்குத் தீர்க்கப்படுமெனத் தெரிகிறது.

இத்திட்டம் உருப்பெற்று செயல்பட மதிப்பீடு ரூ. 15 இலட்சம் ஆகும் என்று சொல்லப்படுகிறது.

பம்பாய்---தாராவி அண்ணு படிப்பகம்

பம்பாய்-தாராவி தி.மு.க. துணைமன்றமாகிய அபுபக்கர்சால் அண்ணு படிப்பகத்தின் தேர்தல், 'திராவிடரக'த்தில் 14—7—68-ல், கழக ஆணையாளர் அ. காமராசு தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு வரவு - செலவு ஒப்புதல் செய்யப்பட்டு இருப்புப் பணம் ஒப்படைக்கப்பட்டது; மன்றத்திற்குத் தனிப் பணிமனை ஒன்று வாங்குவதற்கு உறுப்பினர்கள் ஒப்புதல் தந்தார்கள்.

சேரை ப. முகமது தலைவராகவும், டி. எம். முகைதீன் செயலாளராகவும், டி. ஏ. பாபு துணைச் செயலாளராகவும், கே. எம். பக்கீர் பொருளாளராகவும், வி. என். கனி தணிக்கையாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கே. எம். எஸ். முகைதீன், டி. கே. பக்கீர் முகைதீன், எம். ஜமால், ஏ. என். கானுர், காதர், முகைதீன், ஏ.எம். சையது, பி. எம். கனி, ஏ. எம். ஜமால், ஏ எம். அனிபா, கே.ஏ.எஸ். முகைதீன், கே. எஸ். பாபா முகைதீன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் அ. காமராசு, கே.எம்.எஸ். முகைதீன், சேரை ப. முகமது, பக்கீர், வி. எம். சனி ஆகியோர் உரையாற்றினர். தோழர் டி. ஏ. பாபு நன்றி கூறினுர்.

பேராசிரியர்

மயிலை சிவமுத்துவின் தமிழ்ப் பணி

இரங்கற் கூட்டத்தில் பாராட்டுரைகள்

சென்னை நக்கீரர் கழகக் காப்பாளரும் பேராசிரியருமான மயிலை சிவமுத்து அவர்கள் மறைவைக் குறித்து சென்னை நக்கீரர் கழகச் சார்பிலும், செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவைச் சார்பிலும் 18—7—68 மாலை 6-30 மணிக்கு சென்னை ஏ.ஆர்.சி. மகளிர் பள்ளியில், சென்னைப் பல்கலைக் கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் ந. சஞ்சீவி தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் கூடியது.

மயிலை சிவமுத்து அவர்களின் அயராத தமிழ்த் தொண்டின் சிறப்பினையும், அவர் மாணவர் மன்றத்தில் பங்கேற்று தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளையும், சிறுவர்களுக்கு சிறந்த நூற்களை எழுதிச் சிறந்த நிலை அடைந்த திறத்தையும் தலைவர் விளக்கிக் கூறி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைச் சார்பிலும் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினர்.

பின்னர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலர், பைந்தமிழ்ப் பாவலர் ஆ. கி. பரந்தாமனுர், புலவர் க. பழனி பாலசுந்தரனுர், திருவாட்டி கே. சகுந்தலா, புலவர் கா. சி. தனக்கோடி, வ. சுப்பையா (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்), மா. செங்குட்டுவன், புலவர் தணிகை உலகநாதன், புலவர் அண்ணுமலை ஆகியோர், பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தமிழ் நெறி காக்கவும், மாணவர் தமிழ் மொழி இடத்தே பற்று கொள்ளவும் செய்த பணிகளையும், 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தன் குடும்பத்துடன் பங்கேற்று இயக்கத்தை நடத்திய சிறப்புக்களையும், புலவர் குழுவில் அங்கம் வகித்தும் மாணவர் மன்றம் நடத்தியும், தமிழ்த் திருமணங்கள் செய்து வைத்தும், குழந்தைப் பாட நூல்கள்—பாடல்கள்இயற்றி சிறப்புக்கள் பெற்ற செய்திகளையும், தமிழ் ஆசிரியர்கள் சங்கத் தலைவராய் இருந்து தமிழ் ஆசிரியர்கள் சிறப்பு அடைய செய்த பணிகளையும் சிறக்கப் பேசினுர்கள்.

திரு. சி. பாலசுப்பிரமணியம் (தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்), தலைவர் கொண்டுவந்த இரங்கற் தீர்மானத்தை ஒட்டிப் பேசினுர். இரங்கற் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுந்தரர் தமிழ்க் கல்லூரி

சென்னை சுந்தரர் தமிழ்க் கல்லூரியின் சார்பில், மறைந்த பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் மறைவு குறித்து இரங்கற் கூட்டம் நடைபெற்றது. வித்துவான் மே. வீ. வேணுகோபாலர் தலைமையில் பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் எம்.ஏ., பண்டித நடேசனுர் பி ஏ., ஜே பி. ஆகியோர் மறைந்த பெரியாரின் குணநலன்களையும், இந்தி எதிர்ப்புப்போரில் ஆற்றியதொண்டினையும், மாணவர் மன்ற வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வத்தினையும் விளக்கிப் பேசினர். இரங்கற் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வி.ஏ.முனுசாமி நினைவு மன்றம்

சென்னை மாணவர் மன்றத் தலைவரும், வித்துவான் வி. ஏ. முனுசாமி நினைவு மன்றக் காப்பாளருமான புலவர் மயிலை சிவமுத்து அவர்கள் இயற்கையெய்தியது குறித்து சென்னை 16-வது வட்டம் ஆசீர்வாதபுரம் வி. ஏ. முனுசாமி நினைவுமன்றத்தினர், அவைத் தலைவர் ஜி. மாணிக்கம் தலைமையில் கூடி, தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும்மரியாதையையும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்திய உருக்கு ஏற்றுமதிக்கு ஏற்பட்ட பாதக நிலைமை

கப்பலில் ஏற்றிய உருக்குகள் துருப்பிடித்துப் பெரும் இழப்பு

குவெய்த் நாட்டிற்குச் சென்ற சரக்கை ஏற்க மறுப்பு

குவெய்த் சூலை 25—

சூயஸ் கால்வாயை மூடியதன் விளைவாக மேற்கு நாடுகளிலிருந்து குவெய்த்துக்கு எஃகு வருவது தடைப்பட்டது; எனவே, இந்தியாவின் உருக்குச் சரக்குகளுக்குக் குவெய்த்தில் ஏராளமான கிராக்கி இருந்து வந்தது. ஆனால் வரும் ஆண்டுகளில் இந்த முக்கியமான வாணிபத்தை இந்தியா இழந்துவிடக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

சென்ற வாரத்தில் இங்கு வந்து சேர்ந்த சுமார் 3 இலட்சம் பவுன் மதிப்புள்ள (சுமார் ரூ. 63 இலட்சம்) உருக்கு வகைகள் அடியோடு துருப்பிடித்து வீணாகிவிட்டன. இதனால் இந்தியா இந்த முக்கியமான கிராக்கியை இழந்துவிடுமோ என்று அஞ்சப்படுகிறது.

பிரபல குவெய்த் காண்டிராக்டு நிறுவனம் ஒன்று, கல்கத்தாவிலுள்ள உருக்கு நிறுவனத்துக்கு முன்பணம் கொடுத்துத் தருவித்த உருக்கு இது.

கல்கத்தா நிறுவனம் உருக்கு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதுடன், ஏற்றுமதி வாணிபத்திலும் இறங்கியிருப்பதாக நம்பப்படுகிறது. அரசாங்கத் துறை இந்துஸ்தான் உருக்கு உள்பட மற்ற நிறுவனங்களின் உருக்கை வாங்கி ஏற்றுமதி செய்கிறது.

சென்ற வாரத்தில் வந்திறங்கிய உருக்கு மொத்தம் 6,000 டன்கள் இருக்கும். அதில் பலவேறு உருக்குக் கம்பிகள் இருந்தன; பெரும்பாலும் 'சிமெண்டு காங்கிரீட்'டுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகைகள்; ஜூன் திங்களில் கல்கத்தாவில் இந்தியக் கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்ட சரக்கு இது; சுமார் ஒரு மாதம் கழித்து இங்கு வந்து சேர்ந்துள்ளது.

உருக்குக் கம்பிகள் கட்டுக் கட்டாகப் போடப்பட்டிருந்தன. கப்பலின் அடித்தளக் கிடங்குகளில் இக்கட்டுகள் ஏற்றப்பட்டு இருந்தன; கடல் நீர்ப்பட்டு இவை துருப்பிடித்திருக்க முடியாது. எல்லாக் கட்டுகளிலும் வெள்ளை மாவுபோல் ஏதோ படர்ந்திருந்தது.

குவெய்த் நிறுவனம் இச்சரக்கை எடுக்க மறுத்துவிட்டது. இழப்பு ஈட்டுக்காக வழக்குப்போட வழக்கறிஞர்களை நியமித்திருக்கிறது.

இந்தியத் தூதரகமும் குவெய்த் வர்த்தகக் கழகமும் இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் வியாபாரத் துறையில் வீண் பழியை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்பேரத்தினால் ஏற்பட்ட கெட்ட பெயரினால் வருங்காலத்தில் ஏற்றுமதி வாய்ப்புகளுக்கும் பாதகம் நேரிடலாமென்று அஞ்சுகிறார்கள்.

லால்குடிக்கு அருகில் தீ விபத்து

150 குடியிருப்புகள் நாசம்

ரூ. 35,000 நட்டம்

லால்குடி, சூலை 24—

லால்குடிக்கு அருகிலுள்ள மேட்டுப்பட்டி என்ற இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் சுமார் 150 வீடுகள் எரிந்து சாம்பலாயின. ரூ. 35,000 அளவுக்கு நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

விராலிமலைக்கு அருகிலுள்ள சிவானம்பட்டியில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 14 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

திருச்சி நகரில் இன்று இரு தீ விபத்துக்கள் ஏற்பட்டன.

விருத்தாசலத்திற்கு அருகில் தீ விபத்து

40 குடிசைகள் நாசம்

இருவர்மீது வழக்குப் பதிவு

விருதாசலம், சூலை 25—

கடந்த திங்களன்று விருத்தாசலத்தைச் சேர்ந்த எல்லமங்கலம் என்ற கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 40 குடிசைகள் எரிந்து சாம்பலாகிவிட்டன; 60 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டன.

ரூ. 22,000-க்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

தீ வைத்ததாகப் புகார்கள் கூறப்பட்டதன்மீது இருவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வங்கத் தமிழர் சங்கத்தின்

அறிஞர் அண்ணா மணி விழா மலர்

கவியரங்க --- ஓவியப் பகுதிகள்

கல்கத்தா அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கத்தின் அண்ணா மணிவிழா மலரில், 'அண்ணா கவியரங்கப் பகுதி'யும், 'அண்ணா ஓவியப் பகுதி'யும் இடம்பெறும்.

இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் உள்ள கவிஞர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறப்புக் குறித்துக் கவிதைகளை, ஆங்கிலத்தில் அல்லது தமிழில் ஆகஸ்டு 30-ம் நாளுக்குள் அனுப்பிவைக்கும்படி சங்கத்தினரால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சிறந்த தமிழ் --- ஆங்கிலக் கவிதைகள் மலரில் இடம் பெறும்.

இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் உள்ள மாணவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பல கோணங்களில் ஓவியம் (இந்தியன் இங்கியில்) வரைந்து ஆகஸ்டு 30-ம் நாளுக்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சிறந்த ஓவியங்கள் மலரில் இடம் பெறும்.

அனுப்பவேண்டிய முகவரி:— திரு. மா. செங்குட்டுவன், அமைப்புச் செயலாளர், 'அண்ணா மணி விழா மலர்க் குழு', 4, சிவன் கோயில் தெரு (புலியூர்), சென்னை-24.

கழகச் சட்ட திட்டம்

விதி 25--தேர்தல் பிரிவு 5 திருத்தம்

கழகச் சட்ட திட்டம் விதி 25 — தேர்தல் - பிரிவு 5 கீழ்க்காணும் வகையில் திருத்தப்படுகிறது.

சிற்றூர், பேரூர், நகர உட்கிளை, பெருநகர உட்கிளை ஆகிய அமைப்புக்களின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர், தொடர்ந்து ஐந்தாண்டுக்காலம் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களாகப் போட்டியிடும் தோழர்கள், கழகத்தில் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

'அறிவகம்'
சென்னை-13.
25—7—'68

---அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.

கழகத் தேர்தல்

முக்கிய அறிவிப்பு

கழகச் சட்ட திட்டம் விதி 25--- பிரிவு 5-இல் திருத்தம் செய்து கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைகேற்ப, ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெறும் வட்டக் கழகத் தேர்தலில், செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்குப் போட்டியிட விரும்பும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்காக ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பத் தாள்கள் அனுப்பியிருக்கும் தோழர்கள் தவிர, அந்தந்த வட்டக் கழகத் தேர்தல்களை நடத்திவைக்கத் தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் ஆணையாளரிடம் தேர்தல் நாளன்று நேரிலேயே தேர்தல் துவங்குவதற்கு முன்பாக விண்ணப்பத் தாள்களைக் கொடுத்து செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் பங்கு கொள்ளலாம்.

வட்டச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்கள் தவிர வேறு பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்களை, ஆணையாளர், தேர்தல் நாளன்று நேரில் பெற்றுக் கொள்ளமாட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திண்டிவனம்

தி. மு. க. கிளை மறு தேர்தல்

தெ. ஆ. மாவட்டம் திண்டிவனம் தி.மு.க. கிளையின் எல்லாப் பொறுப்புகளுக்குமான மறு தேர்தல், 30—7—68 செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தோழர் ப. உ. சண்முகம் எம்.சி., அவர்கள், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கோவை நகர

4, 8-ஆகிய வார்டுகளில்

மறுதேர்தல்

ஏற்கனவே அறிவித்திருந்த அறிவிப்பையொட்டி, கோவை நகர 4-வது வார்டு உட்கிளையின் எல்லாப் பொறுப்புக்களுக்கும், 8-வது வார்டு கிளையில தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் ஆணையாளரின் பரிசீலனைமீது மறு தேர்தல் எந்தெந்தப் பொறுப்புக்கு நடைபெறவேண்டும் என்று தெரிவிக்கப்படும் அந்தப் பொறுப்புகளுக்கும் 28-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு அந்தந்த வார்டுகளின் பொதுவான இடத்தில் தலைமைக் கழக ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் மறு தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தென் மாவட்டங்களில் தி. மா. மு. க. அமைப்பு

மதுரை, முகவை, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில், தி. மா. மு. கழகத்தின் புதிய கிளைகளை உருவாக்கிடவும், பழைய கிளைகளைப் புதுப்பிக்கவும், மாணவத் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:—

முகவரி:—
கா. காளிமுத்து பி.ஏ.,
பொறுப்பாளர்,
தென் மாவட்ட தி.மா மு.க.,
மதுரை-1.

முன்னாள்மன்னர்கள் நல்லெண்ணத்தை நாடுகிறார் சவான்!

"முன்னாள் மன்னர்களின் நல்லெண்ணத்துடன் இம்முடிவைச் செயல்படுத்த அரசு விரும்புகிறது"

புதுடில்லி, சூலை 26—

"முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மானிய உதவித்தொகையும், சலுகைகளையும் நிறுத்திவிடுவதென்று கொள்கையளவில் அரசு முடிவு செய்திருக்கிறது.

என்று உள்துறை அமைச்சர் சவான், மக்களவையில் தெரிவித்தார்; ஆனால், எந்தத் தேதியிலிருந்து இம்முடிவு அமுலுக்கு வரும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

பிரிட்டிஷ் வானொலியில் அமைச்சர் முத்துசாமி

இலண்டன் தமிழ்ச் சங்கத்தில் வரவேற்பு ஏற்பாடு

புதுடில்லி, சூலை 25—

தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், இரஷ்யா செல்லும் வழியில் புதுடில்லியில் தங்கிய போது தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு 23-7-68 அன்று நிகழ்ந்தது. இரஷ்யாவுக்குச் செல்லுமுன்பாக விடை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்தச் சந்திப்பு அமைந்தது.

அமைச்சர் முத்துசாமியும் அவரது குழுவினரும் இன்று மாலை 4 மணிக்கு டில்லியிலிருந்து பம்பாய் போய், அங்கிருந்து ரோம் — பாரிஸ் — இலண்டன்—பெர்லின் நகரங்களின் வழியாக இரஷ்யா போய்ச் சேருவார்கள்.

இலண்டனில் அமைச்சர் முத்துசாமிக்கும் அவரது குழுவினருக்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் வரவேற்பு அளிக்கும்.

அமைச்சர் முத்துசாமியையும், மேயர் அபிபுல்லாபேக்கையும் பிரிட்டிஷ் வானொலி நிலையம் பேட்டி கண்டு அவர்களது பேட்டியை வானொலியில் ஒலிபரப்பும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

26--7--68

நாகை

13-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கரையான் பிள்ளையார் கோயில் தெருவில்; தலைவர்: நைனா முகமமது; பேசுவோர்: திருவாரூர் கே. தங்கராசு, எஸ்.எஸ். பாட்சா, ஆர். கல்யாணசுந்தரம், எஸ். தியாகராசன், கே.சி. சேகர், எஸ். யூசுப் சா, வி. மதார்சா, எஸ். எம். இரங்கசாமி எம்.சி., என். பக்கிரிசாமி, டி. கோவிந்தராசன் எம்.சி., கே. சிவபுண்ணியம், பி. பின்னன், என். ஜம்புலிங்கம் எம்.சி., எம். சின்னையன் எம்.சி.

27--7--68

புதுவை

13-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கடற்கரைத் திடலில்; தலைவர்: கோ. பாண்டியன்: பேசுவோர்: சி. தமிழரசி, எம்.ஏ. சண்முகம், செ. கோவிந்தராசன், சி.பி. திருநாவுக்கரசு, சி.என். பார்த்தசாரதி, முருகையன், மற்றும் பலர்.

சேலம்

25-வது வட்டம் நாவலர் படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்குக் குண்டு பிள்ளையார் கோயில் தெருவில்; தலைவர்: சி. இராசு; பேசுவோர்: கேரள சுந்தரம், ஈ.ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கே. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. மாரியப்பன் எம்.சி., சிற்றுளி சுப்பிரமணியம், எஸ்.ஏ. அன்புக்கரசு, மற்றும் பலர்.

திண்டுக்கல்

உதயசூரியன் மன்றம், மற்றும் 4-வது வட்டார தி.மு.க. சார்பில் தென்காசி கதிரவன் எம்.எல்.ஏ., திருஞானம் எம்.எல்.சி. ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 7 மணிக்கு சொசைட்டி தெருவில்; தலைவர்: தா. காதர்கான்; பேசுவோர்: வி. எஸ். எஸ். மணி எம்.எல்.ஏ., கே.எம். மேத்தா எம்.எல்.ஏ., மு. காதர் சா, அ. பாலமுருகேசன், கா. வே. வி. இராசன், க. அங்குசாமி எம்.சி., மா. தங்கவேலா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.